முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 15.07.2025

O.S.266/2014

பி.வா.சா.2 – விஜயகுமார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது அப்பா என்று இறந்தார் என்றால் 04.12.2013 ஆகும். நான் இந்து ஆச்சார குடும்பத்தை சேர்ந்தவர். கணவர் இறந்தால் 41 நாட்களுக்கு மனைவி பூஜையை அனுசரித்து வீட்டிலேயே இருப்பார் என்றால் இல்லை. என்னுடைய சகோதரி செய்த தொந்தரவினால் எனது அம்மா 16 நாள் காரியம் முடிந்தவுடன் பத்திர அலுவகத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனது அம்மா எனது சகோதரியிடம் சமாதானம் பேசி சென்றதாக வழக்கில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முப்பந்தல் கோவிலுக்கு பின்புறம் 5 ஏக்கர் நிலத்தை 1ம் வாதிக்கு எனது அப்பா எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆமாம். எனது அப்பாவிற்கு 5 ஏக்கர் நிலத்திற்கான பாத்தியம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இடத்தை எனது அப்பா உயிருடன் இருந்தபோதே விற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்த பின்பு எனக்கு தெரியவந்தது. இடலாக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது அப்பா வாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணச்சொத்துகளில் இருந்து வந்த வருமானத்தை எனது பெற்றோர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்றால் இல்லை. எனது அப்பா இறந்து 2 மாதங்கள் எனது அம்மா வாடகையை வாங்கினார். அதன் பின்பு வாதி வாங்கவிடவில்லை அவரே வாங்கிக்கொண்டார். எனது அம்மா மற்றும் நான் சேர்ந்து இடலாக்குடி சார்பதிவாளர் அலுவலக சொத்து சம்பந்தமாக இடஞ்சல் செய்து வில்லங்கம் செய்ய முயற்சி செய்ததால் அசல் வழக்கு எண். 163/2017 ஐ வாதி தாக்கல் செய்தார் என்றால் இல்லை. 2 வது வாதி சாட்சியம் அளித்து சென்ற பின்பு வாடகையை என்னிடம் தர வேண்டும் என்று 1ம் வாதிக்கு அறிவிப்பு செய்தேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் கொடுத்ததா என்றால் சரிதான். அது வா.சா.ஆ.11 ஆகும். எனக்கும் எனது மூத்த சகோதரிக்கும் வாடகையில் பங்கு உள்ளதை கேட்டு அறிவிப்பு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பதில் ஆனது 1ம் வாதி எனக்கு அளித்த பதில் என்றால் சரி. அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு பின்னிட்டு நான் 1ம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சொத்தை அமைதியாக வாதிகள் அனுபவிப்பதை தடுக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி அறிவிப்புகளை அனுப்பிஉள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாரிசுரிமையை நிலைநாட்ட அறிவிப்புகளை அனுப்பினேன். எனது பெற்றோர்கள் உயிருடன்

இருந்தபோதோ அனைத்து சொத்துகளையும் பங்கிட்டு கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் எனது அம்மாவை என்வசப்படுத்தி வலுக்கட்டாயமாக இழுத்து சென்று 2009 ல் எழுதிக்கொடுத்த ஆவணத்தை 2014 ல் ரத்து செய்யவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ரத்து ஆவணத்தில் எந்த இடத்திலும் நான் வற்புறுத்தியதாக சொல்லவில்லை. அந்த ரத்து ஆவணத்தில் 2009 ஆவணம் நடைமுறைப்படுத்தாததால் ரத்து செய்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2009 ஆவணத்திற்கு பிறகு வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்து வாதி சிட்டா செலுத்தி வருகிறார் என்றால் இல்லை. 2013 வரை எனது அம்மா பெயரிலேயே கரத்தீர்வை சிட்டா இருந்தது. கோட்டாட்சியரிடம் எனது தாயார் மூத்த குடிமக்கள் பராமரிப்பு சட்டத்தின் கீழ் மனு செய்தார்என்றால் சரிதான். இதில் என்னுடைய தலையீடு இல்லை. அவர் சுயமாக கொடுத்தார். எனது அம்மாவிற்கு போதிய வருமானம் இருந்ததால் அந்த மனுவை முழுவிசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தை காண்பித்து தள்ளுபடி செய்தார்கள். அந்த உத்தரவில் போதிய வருமானம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் இருந்தது. வழக்கு பட்டியல் சொத்தில்இருந்து வருமானம் முழுவதையும் எனது அம்மா அவரது காலம் வரை எடுத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. வழக்கு பட்டியல் சொத்தில்இருந்து வருமானம் முழுவதையும் எனது அம்மா அவரது காலம் வரை எடுத்ததால் எனது அம்மா வின்மனு தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது அம்மாவை நான் சரியாக பராமரிக்காததால் எனது அம்மா கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. 2014 ல் எனது அம்மாவை வாதிகள் தொந்ரவுசெய்ததால் 2009 ஆவணத்தை ரத்து செய்ததாக அந்த 2014 ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை என்றாலும் அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. 2014 ம் ஆண்டு எழுதப்பட்ட செற்றில் மென்று ஆவணத்தில் அன்பும் பாசமும் நிறைந்துள்ளதால் எழுதிய ஆவணம் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது பொதுவாக எல்லா ஆவணத்திலும் எழுதுவார்கள். எனது அம்மா ஆவணத்தை ரத்து செய்ய முழுகாரணமும் நான் தான் என்றால் இல்லை. எனது அப்பா இறந்து 41 நாட்கள் கடக்காத நிலையில் எனது அம்மாவை வற்புறுத்தி வலுக்கட்டாயமாக இழுத்து சென்று ஆவணத்தை ரத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மா எனது கஷ்டடியில் இருந்ததால் நான் சொல்வதை எனது கேட்கவேண்டும் என்ற நிலையில் இருந்தார் என்றால் இல்லை. எனது அம்மா மற்றும் வாதிகள் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து எனது அப்பாவின் இறுதி சடங்கை நடத்தினோம் என்றால் இல்லை. 1ம் வாதியின் கணவரும் நானும் சேர்ந்து AR கேம்ப் ரோட்டில் இடம் வாங்குவது சம்பந்தமாக குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரி. எனது அப்பாவின் தொழிலை 2005 ல்ஒப்படைத்தார் என்றால் இல்லை 2007 ல் ஒப்படைத்தார். அந்த தொழிலில் நல்ல வருமானம் வருவதால்

நான் தொடர்ந்து நடத்திவருகிறேன் என்றால் நலிவடைந்த நிலையில் எனது அப்பா என்னிடம் கொடுத்த தொழிலை நான் திருத்தம் செய்து நடத்திவருகிறேன். எனது நிருபணவாக்குமூலத்தில் சொற்பமான சொத்துக்கள் கொடுத்ததாக சொல்லியிருப்பதில் அவை அனைத்தும் நல்ல மதிப்பான சொத்துக்கள் என்றாலும் அதனை மறைத்து வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தொழில் ரீதியான சொத்துக்கள் சில வாடகை சொத்துக்கள் மட்டும் எனக்கு கொடுத்துள்ளார்கள். வங்கியில் வாதிகள் கடன் வாங்கமுயற்சிசெய்ததாக சொல்லியிருப்பதில் வாதியின் பெயரில் பட்டா மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் வழக்கு சொத்துகளுக்கு உள்ளது என்றால் சரியல்ல. எனது அம்மாவின் பெயரை முதல் பெயராக வைத்து ஆவணங்களை வாங்கியருந்தார்கள் அதனை வங்கி கவனித்து எனது அம்மாவிடம் கேட்டபோது எனது அம்மா மறுத்துவிட்டார் அப்போது எனது அம்மாவிற்கு கடன் விபரம் தெரியவந்தது. அந்த ஆவணங்களில் வாதிகளின் பெயர் இருந்தா என்றால் சிட்டாவில் வாதியின் பெயர் இருந்தது. வாதிகள் எனது அம்மாவிடம் பல முறை பிரச்சசனைகள் செய்ததாக சொல்லியிருப்பதில் அவ்வாறு பிரச்சனைகள் எதுவும் நடைபெறவில்லை. நான் சொல்லும் பிரச்சசனைகளுக்கு புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய தலையீடு இல்லாததால் கொடுக்கப்படவில்லை. என்னுடைய தலையீடு வந்த பின்பு பத்திரம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல டிவிடி காலனியில் உள்ள வீட்டை வாதியின் மகள் சண்முகப்பிரியாவிற்கு எழுதிவைத்து அதில் எனது அம்மா குடியிருந்துவந்தார் என்றால் சரியல்ல. அந்த வீடு கோயில் சொத்து என்றால் சரி. இப்போதும் அந்த கோவிலின் தரை வாடகை சண்முகப்பிரியாவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு தெரியாமலேயே மாற்றியுள்ளார்கள். எனது தாயார் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அடிப்படையிலேயே டிரஸ்ட் சண்முகப்பிரியாவிற்கு மாற்றினார்கள் என்றால் இல்லை. எனது அம்மா உயிருடன் இருந்தபோதோ இது சம்பந்தமாக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் வாடகை பணத்தை யார் வாங்கிவருகிறார் என்றால் ரீசர்வே எண் P 24/140 ன் வாடகையை எனது மகன் வாங்கிவருகிறார். மற்ற 141, 143 ன் வாடகையை வாதிகள் வாங்கி வருகிறார்கள். எனது அம்மா இறந்தபோது என்னுடன் இருந்தார்கள் என்றால் இருந்தார். எனது அம்மாவிற்கு மனகஷ்டம் மனவேதனை போன்றவை ஏற்பட நான்தான் காரணம் என்றால் இல்லை. எனது அம்மாவிற்கு செற்றில்மென்று ஆவணத்தை ரத்து செய்ய உரிமையில்லை என்றாலும் ரத்து ஆவணம் சட்டபடி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நிருபணவாக்குமூலத்தில் சொல்வது போல் வாதிகள் எனது அம்மாவை அடிக்க வில்லை என்றாலும் நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அம்மா எழுதிய செற்றில்மென்று ரத்து ஆவணம் மற்றும் செற்றில்மென்று ஆவணம், பொது அதிகாரப்பத்திரம் ஆகியவை

செல்லத்தாகததவை என்றால் சரியல்ல. 2009 செற்றில் மென்று ஆவணத்தின் படி வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 2009 ல் எனது அம்மா எழுதிக்கொடுத்த செற்றில் மென்று ஆவணத்தின் படி வாதிகளின் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்தது என்றாலும் வாடகை அனுபவம் மட்டுமே எனது அம்மாவிற்கு இருந்தது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கது, வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.